# மனம் திருந்திய மகன்கள்











# மனம் திருந்திய மகன்கள்

ஒரு ஊரில் வயதான தந்தைக்கு நான்கு மகன்கள் இருந்தனர். நான்கு மகன்களையும் நன்றாக படிக்க வைத்தார். அறிவிலும் குணத்திலும் சிறந்தவர்களாக்க விரும்பினார். ஆனால் அவர்களுக்குள் சிறு சிறு சண்டைகள் ஏற்படுவதைக் கண்டு மனம் வருந்தினார்.

ஒருநாள் தன் நான்கு மகன்களையும் அழைத்தார். ஒவ்வொருவரிடமும் ஒரு குச்சியைக் கொடுத்து உடைக்கச் சொன்னார். அவர்களும் எளிதாக உடைத்தனர். பின் குச்சிகள் அடங்கிய கட்டு ஒன்றைக் கொடுத்தார். அவர்கள் எவ்வளவு முயன்றும் கட்டுகளை உடைக்க முடியவில்லை. எப்படி உடைக்கலாம்? என யோசித்தனர். பின்னர் நான்கு பேரும் சேர்ந்து உடைக்க முயன்றனர். வெற்றியும் பெற்றனர். நால்வரின் முகத்திலும் மகிழ்ச்சி அப்போதுதான், தந்தை எதற்காக குச்சிக்கட்டை உடைக்கச் சொன்னார் என்பதை உணர்ந்தனர். ‘இனிமேல், நாங்கள் நால்வரும் ஒற்றுமையுடன் இருப்போம்’ என்று தந்தையிடம் கூறினர். தந்தையும் மனம் திருந்திய மகன்களைக் கண்டு மகிழ்ச்சியடைந்தார்.

# மனம் திருந்திய மகன்கள்

1. தந்தை வருத்தப்படக் காரணம் என்ன?
2. தந்தை மகன்களிடம் கட்டுகளை என்ன செய்யச் சொன்னார்?
3. மகன்கள் எப்படி வெற்றி பெற்றனர்?
4. நான்கு மகன்களும் தந்தையிடம் என்ன கூறினர்?
5. கதை கூற வரும் நீதி என்ன?